# நடப்பு நிகழ்வுகள்- ஜூன் 22 - 2017

- யோகாவின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் சிறந்த பங்களிப்பனை அளித்ததற்காக புனேவிலுள்ள இராமாமணி ஐயங்கார் நினைவு யோகா நிறுவனம் பிரதமரின் யோகாவிருதுக்கு முதன்முதலாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. 40 ஆண்டுகளுக்குமேலாக சர்வதேசஅளவில் யோகாவை பரப்புவதற்காக இந்நிறுவனம் சேவைபுரிந்துள்ளது.

- புகழ்பெற்ற ஆயுர்வேத மருத்துவர் “வைத்திய” ராஜேஷ் கோடெச்சா மூன்றாண்டு காலத்திற்கு AYUSH அமைச்சகத்தின் சிறப்புச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஜெய்ப்பூரிலுள்ள சக்ரபாணி ஆயுர்வேத மருத்துவமனையின் தலைமை ஆலோசகராவார்.

- ஐக்கிய நாடுகள் அவைக்கான ரஷ்ய நாட்டின் “விளாடிமிர் இவானோவிச் வொரான்கோவ்” புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் பயங்கரவாத எதிர்ப்பு அலுவலகத்தின் (UNCTO: United Nations Counter-Terrorism Office).தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

- 2017 ஆம் ஆண்டின் உலகில் சிறந்த விமான சேவை நிறுவனமாக “கத்தார் ஏர்வேஸ்” (Qatar Airways) 2017 ம் ஆண்டின் “உலகில் சிறந்த விமான சேவை நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்ககாக 22 ஆளில்லா கண்காணிப்பு விமானங்களை வழங்க அமெரிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது 300 கோடி டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ19350 கோடி) மதிப்பிலான வர்த்தக நடவடிக்கையாகும். இந்த விமானங்களை ஜெனரல் அட்டாமிக்ஸ் என்ற நிறுவனம் உற்பத்தி செய்கிறது.

- வீடுதோறும் எரிபொருள் வழங்கும் இந்தியாவின் முதல் நகரமாக பெங்களூரு நகரம் மாறியுள்ளது. பால் மற்றும் செய்தித்தாள்கள் போன்ற சேவையை வழங்கும் Mypetrolpump என்ற Startup நிறுவனம் வீட்டிற்கே எரிபொருள் வழங்குகிறது.

OXFORD IAS ACADEMY

- இந்தியாவில் தற்போது 160 ஸ்வீடன் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன். இந்த நிறுவனங்கள் மூலம் 1.6 லட்சம் பேருக்கு நேரடியாகவும் 11 லட்சம் பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைத்துவருகிறது. 1903 -ல் முதல் முறையான எரிக்ஸ்சன் நிறுவனம் ஆரம்பித்தது. இந்நிலையில் “இந்தியாவில் தயாரிப்போம்” திட்டத்திற்கு ஸ்வீடன் அளித்துவரும் ஆதரவிற்கு அந்த நாட்டு பிரதமர் ஸ்டெ∴பான் லோ∴ப்வெனிடம் இந்திய பிரதமர் தொலைப்பேசியில் நன்றி தெரிவித்துள்ளார்.

- மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணியின் குடியரசுத் தலைவர் வேட்பாளராக பீகார் ஆளுநர் ராம்நாத் கோவிந் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதனால் அவர் பதவியை ராஜிநாமா செய்தார். அதனால் மேற்கு வங்க ஆளுநர் கேசரிநாத் திரிபாடி பீகார் ஆளுநர் பொறுப்பை கூடுதலாக கவனிப்பார் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- ஐபிஎல் போல தென்னாப்பிரிக்காவிலும் டி20 குளோபல் லீக் என்றொரு டி20 லீக் தொடங்கப்படவுள்ளது. இந்தப்போட்டிக்கான அணிகளின் ஏலத்தில் டெல்லி ஐபிஎல் அணி உரிமையாளர் ஜி.எம்.ஆர் குழுமம் ஜோகன்ஸ்பர்க் அணியை வாங்கியது. அதேபோல் கொல்கத்தா ஐபிஎல் உரிமையாளரான ஷாருக்கான் கேப்டவுன் அணியை ஏலத்தில் தேர்ந்தெடுத்தார்.

- இந்தியா “ஏ” மற்றும் 19 வயதுக்குட்பட்ட அணிகளின் பயிற்சியாளராக உள்ள ராகுல் டிராவிட்டுக்கு பதவி நீடிப்பு வழங்க பிசிசிஐ முடிவெடுத்துள்ளது.

- சவூதியின் அரசர் சல்மான் பின் அப்துல்லாஸிஸ் அல் (Salman bin Abdulaziz Al Saud), புதிய பட்டத்து இளவரசராக தனது மகனான முகம்மது பின் சல்மானை (31) அறிவித்திருக்கிறார். இவர் பிரதமராகவும் பாதுகாப்புத்துறை மந்திரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஜி.எஸ்.டி எனப்படும் சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையை ஜுலை 1 முதல் நடைமுறைப்படுத்த ஜம்மு – காஷ்மீரை தவிர மற்ற மாநிலங்கள் அனைத்தும் ஒப்புதல் அளித்துள்ளன.

OXFORD IAS ACADEMY